# பொதுக்காலம் 21ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

நலன்களால் நாளும் நிறைவு பெறச் செய்யும் நாயகனுக்கு நன்றிப் பண் பாட வந்துள்ள உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 21ஆம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு மகிழ்வோடு வரவேற்கின்றோம்.

நாம் மன்றாடிய நாளில் நமக்குச் செவிசாய்த்த இறைவனுக்கு நன்றிகள் சொல்லி, அவர் செய்த நன்மைகளை மறந்து, அவரைப் போற்றிப் புகழாமல் இருந்த தருணங்களுக்காக மனம் வருந்தி, மன்னிப்பு வேண்டுவோம்.

இன்றைய முதல் வாசகத்தில், எசேக்கியாவின் அரண்மனைப் பொறுப்பாளனான செபுனாவின் அழிவினைப் பற்றி ஆண்டவர் கூறும் இறைவாக்கினை இறைவாக்கினர் எசாயா எடுத்துரைக்கிறார். எசேக்கியா வேற்று நாட்டினருடன் கூட்டணி வைப்பதற்கு உறுதுணையாக இருந்ததற்காக செபுனா அழிந்து போகின்றான். எலியாக்கிம் அரண்மனைப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார். தன்னை உயர்த்திய இறைவனின் வார்த்தைகளுக்கு செவிமடுக்காமல் அவருக்கு எதிராக குற்றச்செயல் புரிந்த செபுனா தண்டிக்கப்படுகிறார். ஆண்டவரின் வார்த்தைகளுக்குக் கீழ்படிந்து வாழ்ந்த எலியாக்கிம் உயர்த்தப்படுகிறார்.

இன்றைய திருப்பாடலில், தாவீது அரசர் ஆண்டவர் செய்த வியத்தகு செயல்களை நினைந்து பாடி, அவரை மாட்சிமைப்படுத்துகின்றார். தான் மன்றாடிய நாளில் தனது குரலுக்குச் செவிசாய்த்த இறைவனைப் புகழ்ந்து பாடி நன்றி செலுத்துகின்றார்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில், திருத்தூதர் பவுல் பிற இன மக்களுக்கும் இரக்கம் காட்டிய இறைவனின் மாண்பினை எடுத்துரைக்கின்றார். ‘அவருடைய அருள்செல்வம் எத்துணை மிகுதியானது; அவருடைய ஞானமும் அறிவும் எத்துணை ஆழமானவை’ என்பதை நினைத்து வியந்து புகழ்கின்றார்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் பேதுரு, இயேசுவைப் பற்றிய தனது நம்பிக்கை அறிக்கையை வெளிப்படுத்துகின்றார். அவரை மெசியாவாக, வாழும் கடவுளின் மகனாக ஏற்று அறிக்கையிடுகின்றார். பேதுருவின் நம்பிக்கை அறிக்கையைக் கேட்ட இயேசு தான் அவருக்கு அளிக்க இருக்கும் பொறுப்பினைச் சுட்டிக்காட்டுகின்றார். விண்ணரசின் திறவுகோல்களான திருச்சபைப் போதனைகளை அவரிடம் ஒப்படைக்கின்றார். பாறையாகிய பேதுருவின் மேல் தனது இறையாட்சிப் பணியை தொடர்ந்து ஆற்ற திருச்சபையை கட்டி எழுப்புகின்றார்.

தன்னை முழுமையாய் அறிந்திருந்தும் சீடர்களின் மூலமாக சுய ஆய்வு மேற்கொண்ட இயேசுவைப் போல நம்மையே நாம் சுய ஆய்வு செய்ய முற்படுவோம்.

மேலான அருள்வரங்களைப் பொழியும் இறைவனை நாம் எப்பொழுதெல்லாம் நாடிச் செல்கின்றோம்.? நமது தேவைகளுக்காக, நமது சுயநலன்களுக்காகவே ஆண்டவனை நாடிச் செல்கின்றோம். நமது எண்ணம் நிறைவேறிய பின் இறைவனை மறந்து நன்றி கூற தவறி விடுகின்றோம். அப்படி நிறைவேறாமல் போகும் சமயத்தில் இறைவனில் கொண்ட நம்பிக்கையில் தளர்வை ஏற்படுத்துகின்றோம். இறைவன் என்ன செய்தாலும் நமது நன்மைக்கே என்று இறைத்திருவுளம் ஏற்று நடக்கும் போது மட்டுமே இறைவனோடு நிலையான உறவில் சங்கமிக்க முடியும். வாழும் கடவுளின் மகனாக இயேசு வாழ்ந்ததாலே பேதுரு தனது நம்பிக்கை அறிக்கையை வெளிப்படுத்த முடிந்தது. நாமும் நாம் வாழும் சமூகத்தில் இயேசுவின் மதிப்பீடுகளைப் பின்பற்றி நடந்து நம்மிலே இயேசுவைப் பிரதிபலிப்போம். இவள்(ன்) கடவுளின் மகள்(ன்) என நம்மோடு வாழ்பவர்களும் நம் செயல்கள் வழியாக இறைவனை மகிமைப்படுத்த முயற்சிகள் எடுப்போம். நாம் அளிக்கும் மகிமை, புகழ்ச்சிகளால் அவரது மாட்சிமை ஏற்றம் பெறாது எனினும் நாம் மீட்படைய அது நமக்கு ஒரு கருவியாக அமைகின்றது என்பதை உணர்வோம். திருப்பலியில் இணைவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. விண்ணரசின் திறவுகோல்களை பேதுருவிடம் ஒப்படைத்தவரே எம் இறைவா!

உமது இறையரசுப் பணியை தொடர்ந்து ஆற்றி வரும் எமது திரு அவைப் பணியாளர்களை ஆசீர்வதியும். உம் மந்தையாகிய திருச்சபையை இறை நம்பிக்கையில் வளர்த்தெடுக்கவும், சவால்களைத் துணிவோடு எதிர் கொள்ளும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. மன்றாடிய நாளில் எமக்குச் செவிசாய்ப்பவரே எம் இறைவா!

எம்மை ஆளும் ஆட்சியாளர்களை ஆசீர்வதியும். சுயநலப் போக்கிலே வாழ்ந்து, நாட்டு மக்களை தங்களது நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் இவர்களுக்கு நல்லதொரு மாற்றத்தை அருளி, நாட்டினை முன்னேற்றப் பாதையில் வழிநடத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஞானமும் அறிவும் நிறைந்த முழுக் கருவூலமாகிய இறைவா!

கல்வி கற்கும் ஒவ்வொரு பிள்ளைகளையும் ஆசீர்வதியும். நீர் வளர வளர ஞானத்திலே வளர்ந்து இறைவனுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்தது போல, எம் பிள்ளைகளும் உம்மைப் பற்றிய அறிவிலும், கல்வி அறிவிலும் சிறந்து விளங்கவும், நல்லதொரு எதிர்கால வாழ்வையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. நலிந்தோரைக் கண்ணோக்குபவரே எம் இறைவா!

உடல், உள்ள நோய்களினால் வருந்துவோரைக் கண்ணோக்கும். உமது குணமளிக்கும் தூய ஆவியினால் தங்களது நோயின் கொடுமைகளிலிருந்து விடுதலை பெற்று, உமக்கு உண்மையுள்ள சாட்சிகளாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com